**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.C.C.371/12**

**DEPOSITION OF WITNESS FOR PW.1**

**Name RAMESH BABU S/O. RAJAGOPAL NAIDU**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2021.**

## எதிரி தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை

**நான் காட்பாடி ரோட்டில் ராஜகோபால் பாலிடெக்னிக் கல்லூரி எதிரில் ஓட்டல் தொழில் செய்து வருகிறேன். என்னுடைய ஓட்டலுக்கு கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு திசைகளில் யார் யார் இருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். எனது வீடு ராஜாகோயிலில் உள்ளது. எனது வீட்டின் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு திசைகளில் யார் யார் இருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையில் எதிரிகள் புரோக்கர் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி எதிரிகள் புரோக்கர் என்ற விவரத்தை நான் தாக்கல் செய்துள்ள புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் 08.03.2012 ம் தேதி சத்தியானந்தம் என்கிற நபர் எதிரிகளை என்னுடைய கடைக்கு அழைத்து வந்ததாக சொல்லிய விவரத்தைப்பற்றி நான் தாக்கல் செய்த புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லையென்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ம.த.சா.ஆ.3 ன் ஆவணம் நான் மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்திற்கு நான் உரிமையாளர் இல்லையென்று சொன்னால் சாி தான் எனது மனைவி உரிமையாளர் ஆவார். எனது மனைவி நான் குற்ற முறையீட்டில் சொல்லியுள்ள குற்றப்பிரிவுகளின் கீழ் எதிரிகளின் மீது எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். நான் தாக்கல் செய்த குற்ற முறையீட்டை நான் தாக்கல் செய்ய அருகதை இல்லையென்று சொன்னால் சரியல்ல அக்ரீமெண்ட்**

**........2**

எல்லாம் எனது பெயரில் உள்ளது. குற்ற முறையீட்டில் உள்ள சர்வே எண்கள் முறையே 177/1A மற்றும் 177/4 A உள்ள சொத்துக்களுக்கு எதிரிகள் உரிமையாளர்கள் இல்லை ஆனால் மேற்படி சர்வே எண்களில் உள்ள சொத்துக்களின் உரிமையாளரிடமிருந்து 1வது எதிரி ஞானசேகரன் அக்ரிமெண்ட் போட்டு வைத்திருந்தார். மேற்படி சர்வே நெம்பரில் உள்ள சொத்துக்களின் உரிமையாளர்கள் 1. உலகநாதன் த/பெ.சண்முகம் 2. விஜயலட்சுமி க/பெ.உலகநாதன் 3. அலமேலு க/பெ.பஞ்சாட்சரம் ஆவார்கள். மேற்படி 3 நபர்களையும் நான் தாக்கல் செய்துள்ள குற்ற முறையீட்டில் எதிரிகளாக சேர்க்கவில்லையென்றால் சரிதான். எனது குற்ற முறையீட்டில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்களில் உள்ள சொத்துக்களின் உரிமையாளர்கள் அல்லாத எதிரிகளின்மீது பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னிடம் மேற்படி குறிப்பிட்டுள்ள சர்வே நெம்பர்களில் உள்ள சொத்துக்களுக்கு உண்டான ஆவணத்தை எதுவும் என்னிடம் காட்டவில்லையென்று சொன்னால் சரியல்ல என்னிடம் காட்டினார்கள். என்னிடம் எதிரிகள் ஆவணத்தை காட்டவில்லையென்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் மண்டபத்திற்குண்டான மாதிரி வரைபடத்தை என்னிடம் காட்டியதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளதற்கு ஏதேனும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. ம.த.சா.ஆ.3 ஆவணத்தில் எதிரிகள் எந்தவொரு கையெழுத்தும் செய்யவில்லையென்று சொன்னால் சரிதான். ம.த.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவொரு சம்மந்தமும் இல்லையென்றும் எதிரிகளுக்கு எதிராக பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.3 ஆவணத்தில் சொத்து விவரத்தில்

.........3

கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய திசைகளில் நெடுஞ்சாலை உள்ளதாக குறிப்பிட்டுள்ளதா என்றால் குறிப்பிடவில்லை, ஆனால் அதைக்குறித்து பத்திரப்பதிவு செய்த நாளன்று 2 வது எதிரியிடம் கேட்டதற்கு மெட்ராஸிலிருந்து பெங்களூர் வரை நெடுஞ்சாலை என்றுதான் குறிப்பிட்டிருக்கும் அதனால் மேற்படி இடத்தின் முந்தைய உரிமையாளரான சுப்பிரமணியின் பெயரை குறிப்பிட்டால்தான் அடையாளம் சரியாக இருக்கும் என்றும் அவருடைய நிலம் அனைத்தும் நெடுஞ்சாலைக்காக எடுக்கப்பட்டுவிட்டதாகவும் மேற்படி வேலுச்சாமி என்னிடம் கூறினார். மேற்படி விவரத்தை எனது முதல் விசாரணையிலோ நான் தாக்கல் செய்த குற்ற முறையீட்டிலோ குறிப்பிட்டு சொல்லவில்லையென்று சொன்னால் சரிதான். ம.த.சா.ஆ.2 ஆவணம் 17.03.2012 ம் தேதியன்று கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி ம.த.சா.ஆ.2 ல் உள்ள பத்திரத்தை 16.03.2012 ம் தேதியன்று வாங்கப்பட்டது. மேற்படி ம.த.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள பத்திரத்தின் பின்பக்கத்தில் 26.03.2011 ம் தேதியன்று அட்வான்சாக ரூபாய்.9,00,000/- ஐ பெற்றுக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 22.03.2012 ம் தேதி என்று எழுதுவதற்கு பதிலாக 26.03.2011 என்று தவறுதலாக எழுதப்பட்டுள்ளது அன்றைய தேதியிலேயே மீதிப்பணமும் கொடுக்கப்பட்டு பத்திரமும் 22.03.2012 ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டது. மேற்படி விவரத்தை எனது குற்ற முறையீட்டிலோ முதல் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லையென்றால் சரிதான். மேற்படி ம.த.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள பத்திரம் எனது பெயரில் வாங்கப்பட்டது. மேற்படி ம.த.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள பத்திரத்தின் பின்பக்கத்தில் தவறாக எழுதப்பட்டுள்ளது என்று சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சாியல்ல. ம.த.சா.ஆ.3 ஆவணத்தில் ரூபாய் 1,40,000/- என்று ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தின் மதிப்பை குறிப்பிட்டுள்ளேன். ம.த.சா.ஆ.2 ஆவணத்தில்

சொத்துப்பரிமாற்றத்திற்குண்டான பணம் ரூபாய்.37,03,700/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.த.சா.ஆ.3 ஆவணத்தில் ரூபாய்.37,03,700/- என்று சொத்தை வாங்கியதாக குறிப்பிடவில்லையென்றால் சரிதான். மேற்படி ம.த.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தின் மதிப்பை அரசு நிர்ணயித்த மதிப்பீட்டின்படி ரூபாய்.1,40,000/-க்கு சொத்தை பதிவு செய்தேன் அதை வேலுச்சாமி என்பவர்தான் முன் நின்று பதிவு செய்தார். மேற்படி வேலுச்சாமி முன் நின்று பதிவு செய்ததைப்பற்றி நான் தாக்கல் செய்த குற்ற முறையீட்டில் முதல் விசாரணை மற்றும் ம.த.சா.ஆ.3 ல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ம.த.சா.ஆ.2 ல் உள்ள பணம் பற்றிய சங்கதிகள் மற்றும் மற்ற விவரத்தை பற்றி ம.த.சா.ஆ.3 ல் குறிப்பிடவில்லை என்றால் சாிதான்.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.